**செ. கு. எண்**:76 **நாள்**:20/02/2012

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்**
**இரங்கற் செய்தி – 20.2.2012**

பழம்பெரும் நடிகை செல்வி எஸ்.என். லட்சுமி அவர்கள் 19.2.2012 அன்று இரவு திடீரென்று மூச்சுத் திணறல் ஏற்பட்டு, சிகிச்சை பலனின்றி இயற்கை எய்தினார் என்ற செய்தி அறிந்து சொல்லொணாத் துயரமும் மிகுந்த மன வருத்தமும் அடைந்தேன்.

சிறு வயதிலிருந்தே மேடை நாடகங்களில் நடித்து வந்த எஸ்.என். லட்சுமி அவர்கள் நடிப்பின் மீது மிகுந்த ஆர்வமும், ஈடுபாடும் கொண்டவர். தன்னுடைய 13-வது வயதில் திரைப்படத் துறையில் காலடி எடுத்து வைத்த எஸ்.என். லட்சுமி அவர்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். உட்பட பல முன்னணி நட்சத்திரங்களுக்கு தாயாக நடித்து தனக்கென ஒரு தனி முத்திரையை பதித்துக் கொண்டவர். நான் நடித்த திரைப்படங்களிலும் அவர் நடித்து இருக்கிறார். பார்ப்பதற்கு எளிமையானவர், பழகுவதற்கு மிகவும் இனிமையானவர். தமிழ்நாடு அரசின் ‘‘கலைமாமணி’’, ‘‘கலைச்செல்வம்’’ உட்பட பல்வேறு விருதுகளைப் பெற்றவர்.

1,500–க்கும் மேற்பட்ட திரைப்படங்களிலும், 6,000–க்கும் மேற்பட்ட நாடகங்களிலும் நடித்த எஸ்.என். லட்சுமி அவர்கள், கடந்த சில ஆண்டுகளாக சின்னத் திரை மூலம் தன்னுடைய நடிப்பாற்றலை வெளிப்படுத்தி வந்தார்.

செல்வி எஸ்.என். லட்சுமி அவர்களின் மறைவு திரைப்படத் துறையினருக்கும், நடிப்புத் துறையில் ஈடுபட்டுள்ளோருக்கும் பேரிழப்பாகும். நாடகத் துறையிலும், திரைப்படத் துறையிலும் இவர் ஆற்றிய பணி மகத்தானது.

செல்வி எஸ்.என். லட்சுமி அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆன்மா இறைவனின் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**